**பன்வில பிரதேச சபை - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பன்வில பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத்தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப் பட்டியல் புத்தகங்களை தயாரிப்பதற்காக செலுத்த வேண்டிய ரூபா 27,450 ஆன வெவ்வேறு கடன்கொடுத்தோர் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹாகலவத்த சனசமூக மண்டபம வரை வீதி அபிவிருத்திக்காக ரூபா 240,143 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தமையால் அப்பெறுமானத்தினால் காணி மற்றும் கட்டிடங்கள் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.. | 2021 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிர்மாணக் கடன்பட்டோர் ரூபா 190,000 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | (i) 125(vii) ஊ மற்றும் (xxx) உப பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதைகளிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 303,208 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டியுள்ள ரூபா 303,208 தொகையில் ரூபா 122,071 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுனரால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய ரூபா 181,136 ஆன நிலுவை தொகை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 49 ஆம் பிரிவு | பன்வில பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா சபையனி ்அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா விடுதியொன்றினால் 2015,2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் குத்தகை கொடுப்பனவிற்காக போலியான கணக்கு கூற்றுககளை தயாரித்திருந்தது. | கணக்காய்வு மற்றும் உள்ளூராட்சி மன்ற புலனாய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக தகவல்களை தெரிவிக்குமாறு குறித்த நிறுவனத்தை அறிவூட்டுவதற்கு நவடிக்கை எடுத்துள்ளேன் | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 935/06 ஆம் இலக்க வர்த்தமானியின் 22 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி துண்டுகள் ஏல விற்பனையின் போது மொத்த காணியில் 10 சதவீத அளவு சபைக்கு கையளித்தல் இடம்பெற வேண்டிய போதும் பள்ளேபத்த காணியில் 399 பேர்ச் ஏல விற்பனையின் போது வழங்கப்பட வேண்டியிருந்த 40 பேர்ச்சிற்கு அண்மித்த அளவிற்கு பதிலாக 28 பேர்ச் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளேன் | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,491,664 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,838,528 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான நிர்வாகத்தின் செயலாற்றல்

**(அ) வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவை வீதவரி பெறுமதி ரூபா 780,768 ஆக இருந்ததுடன் 1 இற்கும் 5 இடைப்பட்ட ஆண்டுகளில் நிலுவை வீதவரி ரூபா 606,305 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 89,208 தொகையும் காணப்பட்ட போதும் அத்தொகையை அறவிடுவதில் பலவீனமான நிலைமையொன்று காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவீடு செய்ய எதிர்வரும் நடவடிக்கைகளை திட்டமிட்டு வருகின்றேன் | தாமதமன்றி நிலுவை வெருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| | | |
|---|---|---|
| 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய மதிப்பீடு 2019 சனவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கடை வாடகை செலுத்தாக காரணத்தினால் ரூபா 2,278,00 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. | தற்போது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | தாமதமன்றி நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டணம் ரூபா 708,020 ஆக காணப்பட்டது. | நடமாடும் சேவைகளை நடாத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமன்றி நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் நிலுவை முச்சக்கர வண்டி நிறுத்துமிடக் கட்டண மீதி ரூபா 402,500 மற்றும் ஆண்டின் | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்ட நிலுவையில் தற்போது ரூபா 3,900 தொகை | தாமதமன்றி நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பட்டியலிடல் ரூபா 180,000 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டில் முறையே 61,425 மற்றும் ரூபா 114,400 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | அறவிடப்பட்டுள்ளது. | |
| (iii) முன்னைய ஆண்டிலிருந்து நிலுவையாக இருந்து வரும் முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் 104 நபர்களிடமிருந்து ரூபா 421,675 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் நிலுவையை அறவிடுவதற்காக 24 பேருக்கு மாத்திரம் வழக்கு தொடரப்பட்டிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு வழக்கு தொடருவதற்கு முன்னர் நிலுவைகளை செலுத்துமாறு அறிவூட்டல் கடிதங்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமன்றி நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) முன்னைய ஆண்டிலிருந்து வரும் ரூபா 280,199 ஆன பிரச்சார கட்டணங்கள் நிலுவையில் ஆண்டில் ரூபா 10,360 அல்லது 3.7 சதவீதம் மாத்திரம் நிலுவை வருமானமாக சேகரிக்கப் பட்டிருந்தது. | அறவிட வேண்டியுள்ள மீதியில் ரூபா 122,071 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுனரால் அங்கீகாரத்தின் பேரில் பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | தாமதமன்றி நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை முத்திரைக் கட்டண வருமான மீதியில் ரூபா 3,444,790 கூட்டுத்தொகையில் 1 ஆண்டு முதல் 5 வருடங்களுக்குரிய ரூபா 402,840 ஆன கணக்கு மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று மொத்தம் ரூபா 4,953,002 ஆன செலுத்த வேண்டிய கணக்குகளுக்குரிய காலப்பகுப்பாய்வின் பிரகாரம 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரை காலப்பகுதிக்கான கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2,333,849 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,619,143 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெற்றுக்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நக்கில்ஸ் பம்பரல்ல சுற்றுலா கேந்திரம் மற்றும் ஹுலுகங்க பார்வையாளர் கூடம் நிர்மாணத்திற்காக முறையே ரூபா 4,404,748 மற்றும் ரூபா 11,184,177 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 6.4 சதவீதம் மற்றும் 5.5 சதவீதமான வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | நக்கில்ஸ் பொது வசதிகள் வழங்கும் நிலையத்தினை மேம்படுத்துவுதற்கும் ஹுலுகங்க நீர் வீழ்ச்சி பார்வையாளர் கூடத்துடன் கூடிய கட்டிடத்தின் நிலமாடி மக்கள் வங்கிக்கு வழங்குவதற்கு மதிப்பீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஹுலுகங்க வாரச் சந்தை அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 15,000,000 ஆன செலவினத்தில் முன்னைய ஆண்டிலிருந்து எவ்வித வருமானமொன்றையும் உழைப்பதற்கு சபை தவறியிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் கொவிட் நிலைமையின் கீழ் சந்தை நடாத்துதல் தடைசெய்யப்பட்டிருந்தது | நிலவும் நிலைமைகளின் கீழ் முறையாக முகாமைத்துவம் செய்து உழைக்கக் கூடிய வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |